உள்ளே

இருக்கு! ஆனால் இல்லை!
நேரம் இருக்கிறதா ?
விதி வலியது!

ELITE
MANAGEMENT CONSULTING SERVICES

# தொழில் மலர் – 7

## வியாபாரத்தின் விழுதுகள்..

நிதி மேலாண்மையில் நாம் அதிக கவனம் கொண்டு நாம் நம்மை சார்ந்து தொழில் செய்யும் சிறு நிறுவனங்களுக்கு காலம் கடத்துவது சகஜம்.

ஆனால் உண்மை என்ன என்றால் நமக்கான உற்பத்தியை விட நம்மை சார்ந்து இருப்பவர்களது உற்பத்தி மற்றும் பண விகிதம் குறைவாக இருக்கும். ஆனால் அவர்களது தேவை எப்போதும் அதிகமாக இருக்கும். நாம் சரியான முறையில் அவர்களுக்கான வரவு செலவுகளை சரிவர வழங்கிவிட்டால் அவர்கள் நமக்கான சேவைகளை மேலும் சிறப்பாக செய்வார்கள்.

தினசரி நிறுவனத்தின் வளர்ச்சியை பாதிக்கும் பல காரணிகளில் நம்முடைய சப்ளையர்களின் பங்களிப்பும் மிக முக்கியம்.

அவர்கள் சரியான தரத்திலும் சரியான நேரத்திலும் நம்முடைய சேவைகளை நிறைவு செய்யும் போது நம்முடைய தேவைகளை விரைவாக பூர்த்தி செய்யலாம்.

உண்மை என்னவென்றால் நாம் நம்முடைய சப்ளையர்களுக்கு வழங்கும் மரியாதை என்பது அவர்களது காத்திருப்பை குறைப்பது மற்றும் சரியான நேரத்தில் அவர்களது தேவைகளையும் பூர்த்தி செய்வதில்தான் இருக்கிறது.

## நிதி மேலாண்மை

### முதல் இட்டார் ஒருமுறை அறிந்து அதனால் இட்டார் மறுமுறை

ஒரு முறை உங்களுடைய முதலீடு சரியான முறையில் இருக்குமாயின் அதன் மூலம் பலன் அடைந்து மீண்டும் முதலீடு செய்து அதிக இலாபம் பெறலாம்.





## சொத்து

### நகர்வதும் நகராததும் சொத்து எதுவாயினும் அது தருவதே சிறப்பு

சொத்துக்கள் எப்படிபட்டதாக இருந்தாலும் அதற்கு நாம் செலவு செய்வதற்கு மாறாக அதன் மூலம் இலாபம் பெறக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.

## கடன்

### வாங்க வாங்க இன்பம் அது வந்ததால் தருவதே துன்பம்

கடன் ஆடம்பரத்திற்காக இல்லாமல் நம்முடைய முன்னேற்றத்திற்கு அவசியமானதாக இருக்குமானால் அதுவே நன்மை தரும்.






## வரவு

### வருவது எல்லாம் வரவல்ல வந்ததில் மறைந்தே இருக்கும் சேமிப்பு

வரவு என்பது நம்முடைய முதலீடு செய்ததின் பலன். ஏற்கனவே வரவை அறிந்துதான் செலவு செய்கிறோம் என்றாலும் வரும் வரவு முழுமையாக செலவுக்காக அல்ல!

Elite Management Consulting Services

# இருக்கு! ஆனால் இல்லை!

குறு சிறு நிறுவனங்களின் பொருளாதார திட்டங்கள் அதன் வளர்ச்சியை கட்டுப்படுத்துகிறது. பெரும்பாலும் குறு சிறு நிறுவனங்கள் மாதந்திர செலவுகளில் பெரும்பான்மையானவற்றை வாங்கிய கடன்களுக்காக இருக்குமே தவிர சேமிப்பின் விகிதம் குறைவாகவே இருக்கும்.

சிறியதோ பெரியதோ குறைந்த அளவிலான சேமிப்பினை அதாவது நிகர இலாபத்தின் 10 சதவீதத்தையாவது தொடர்ந்து சேமிக்க வேண்டும். இதன் மூலம் எதிர்கால திட்டங்களுக்கு நிதியை சிறப்பாக பயன்படுத்த முடியும்..

## செலவு

### தங்காது செய்யும் செலவு எப்போதும் தாங்காது அதன் நிலை

வரவினை சரியாக சேமிக்காமலும் திட்டமிடாமலும் செய்யும் செலவு எப்போதும் உறுதியான நிலையில் இருக்கமுடியாது.






## மிகைச் செலவு

### மிகைப் படுத்தும் விரயமது குறைப்பின் நிறைப்படுத்தும் தன் இலை

நீங்கள் நிறுவனத்தின் தேவையற்ற செலவுகளை குறைக்கும் போது அதுவே நம் நிறுவனத்தின் பல தேவைகளை பூர்த்தி செய்யும்.

## மாறுபாட்டு செலவு

### மாறி மாறி வரும் செலவையும் ஏறாமல் செய்யும் நுட்பம்

மாறுபடும் செலவுகளையும் நாம் பெரும்பாலும் முன்னெச்சரிக்கை மூலமும் தொழில் நுட்பங்கள் மூலமும் சரியாக மேம்படுத்தலாம்.






## முதலீட்டாளர்கள்

### வருவது உறுதி என்றால் மற்றவர் தருவதும் உறுதி நமக்கு

நம்முடைய வழிமுறைகள் மூலம் நிச்சயம் இலாபம் பெறமுடியும் என்றால் அதற்கான முதலீடும் நிச்சயமாக பெறமுடியும்.

## Elite Business Plan

Easy formula for Commercial Business

- **100+** Plans we Created
- **50** Plans are Excecuted
- **30** Plans are Created new Opportunities

## Management System for your Business

- **500+** Firms are Consulted
- **80+** Firms are Created Multi Branches
- **100+** Successfully Hand overed to Next Generations

## Elite Market Survey

Survey for Survival of your business.

- **50+** To Find Right Location
- **80+** To Find Market Gap
- **100+** To Find Customer Requirements

**உங்களது வெற்றியின் சரித்திரம் சரியான தேர்வை பொறுத்தே அமைகிறது..**

Elite Management Consulting Services

## கடனாளர்கள்

### கேட்டால் கொடுக்க இன்பம் பெறுவார் துன்புறுவார் கேட்கும் போது

மற்றவர்களின் நிலை அறிந்து அதனை தீர்க்க கடன் கொடுத்தால் மகிழ்ச்சி அடைவர் ஆனால் அதனை திரும்ப கேட்கும் போது அதனை பெரும் துன்பமாக கருதுவர்.






## விளிம்பு விலை

### விலையது படியும் படியாவிடில் படியேற விற்பதே விளிம்பு விலை

ஏற்போதும் இதுதான் விலை என்று இறுக்கமாக இல்லாமல் நஷ்டம் ஏற்படாமல் இருக்க இலாபம் இல்லாமலும் வியாபாரத்தை நடத்தலாம்.

## நிதி ஒதுக்கீடு

### ஒதுக்கீடு பெறும் ஒப்புதல் எளிது தப்புதல் தராது கணக்கு

எப்போது முறையாக நிதி ஒதுக்கீடு செய்கிறோமோ அப்போது தேவைகளை அறிந்து முறைப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் முடியும்.





## ஊதியம்

### ஊதியத்தின் உறுதிதரும் ஊக்கத்தின் பலன் தராது மற்றவை என்றும்

நிறுவனத்தின் நிதி ஆதாரங்களை வைத்து பணியாளர்களின் ஊதியத்தில் தாக்கம் ஏற்பட கூடாது. சரியான நேரத்தில் வழங்கும் ஊதியத்தை விடவேறு உற்சாகம் பணியாளருக்கு இல்லை.

Elite Management Consulting Services


Elite Strategic Consulting
Idea Boosters for your Business.

Elite Culture Development
Nurturing people into Employees.

60+ Business people are Serviced
32 Owners are moved into Next Nevel
32 Owners are well balanced their Challenges
11% Reduced Employees Turn Over
60% Work Efficiency Increased
60% of Sales Increased


**நிறுவனம் என்பது நிறுவப்படுவது மட்டும் அல்ல முறையாக நிர்வகிக்கப்படுவதும் தான்.**

## ஊழியர் நலன்

### பலன் வேண்டி செய்தொழில் என்றும் நலம் வேண்டி விடின்

எப்போதும் சுற்றியிருக்கும் மக்களின் நலன் கருதி வியாபாரம் முன்னெடுக்கப்படுகிறதோ அப்போது அதன் வளர்ச்சி சரியாக தீர்மானிக்கப்படுகிறது.





## தேய்மானம்

### தேர்வு செய்யும் அனைத்திற்கும் உண்டு தேய்மானம் அதனை மீட்பதற்கே

நிறுவனத்தின் ஒவ்வொரு பொருளுக்கும் சரியான தேய்மான செலவுகளை கணக்கிடும் போது திடீரென்று ஏற்படும் இழப்புகளை சரியாக கையாள முடியும்.

## வெகுமானம்

### உந்தி உந்தி செய்விக்கும் வேலை உந்தாது செய்யும் வெகுமானம்

நாம் எதிர்பார்க்கும் அதிகப்படியான முன்னேற்றம் நிறுவனத்தில் ஏற்பட வேண்டுமானால் நம் பணியாளர்கள் முழுமையான திருப்தியுடன் செயல்பட வேண்டும்.



### தோல்விகளை கடக்க தோழமை கொள்வோம்!!

வழி தெரியாத ஊருக்கு வழிபோக்கரிடம் வழி கேட்பது போல் நம்முடைய வியாபாரத்தில் பிரச்சனைகளை சரி செய்ய யாரிடம் கேட்பது ?

நம்முடைய சமூகத்தில் அல்லது நம்முடைய தொடர்பில் சிறந்து விளங்கும் நிறுவனங்கள் மற்றும் மனிதர்களின் தோழமை மூலம் மட்டுமே நம்முடைய சவால்களை வெற்றி கொள்ள முடியும். தவறான பாதையில் ஆயிரம் பேர் ஆயிரம் முறை பயணித்துதான் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஒருவர் பயணித்த பாதையின் அனுபவங்களை கேட்டு அதன் பாதிப்புகள் ஏற்படாமல் விரைவாக வெற்றி நடை போட முயற்ச்சி செய்யலாம்.

## விதி வலியது!

எப்போதும் நடப்பு நிகழ்வுகளை நினைத்து நொந்துகொள்வதுண்டா? நம்முடைய செயல்களுக்கு காரணம் விதி என்று சொன்னால் நம்புவீர்களா? ஆம் ஒவ்வொரு வெற்றிகரமான செயல்களுக்கு பின்னும் ஒரு விதி - பார்முலா இருக்கிறது. அந்த பார்முலா எனப்படும் விதியை யார் சரியான முறையில் கடைபிடித்து முழுமையாக செயல்படுத்துகிறார்களோ அவர்கள் நிச்சயம் வெற்றி பெறுவார்கள்

சரி அப்படியானால் மதி ?

எப்போது நம்முடைய மதியால் தவறான பார்முலாவை பின்பற்றுகிறோமோ அப்போதுதான் நாம் தோல்வி அடைகிறோம். இதற்குத்தான் விதியை மதியால் வெல்லலாம் என்று சொல்லி வைத்தார்கள். எப்போது நம்முடைய மதி நுட்பம் பெறுகிறதோ அப்போது எப்பேற்பட்ட விதியையும் மாற்ற முடியும்.

## நேரம் இருக்கிறதா ?

உங்களது வேலைகளை கடந்து முன்னேற்றத்தை தீர்மானிக்க ?
இலக்குகளை அடைந்து குடும்பத்தை நிர்வகிக்க ?
செலவுகளையும் தாண்டி சேமிப்பினை பற்றி சிந்திக்க ?
தடைகளையும் தாண்டி வாய்ப்புக்களை உருவாக்க ?
இல்லை என்பது உங்களது பதில் என்றால் அதற்கான வாய்ப்பினை நாங்கள் உருவாக்கி தருகிறோம்.

99406 00860 www.myelite.in elitemanagementconsultingservices

Elite Management Consulting Services